රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

அரச கணக்குகள் திணைக்களம்

Department of State Accounts

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. SA/AS/CMA/Circular | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 20.12.2012 |

அரச கணக்குகள் சுற்றுநிருப இல: 228/2012

அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும்

**2012 ஆம் ஆண்டுக்கான வருமானக்கணக்கு**

நிதிப்பிரமாணம் 151 இற்கு அமைய அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் 2013 ஆம் ஆண்டிற்கான வருமானக்கணக்கை தங்களது வருமான குறியீடுகளுக்கு அமைய தயாரித்து, சரிபார்த்து, கையொப்பம் இட்ட பின்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அவரது சாண்றுக்காக சமர்பிக்கப்படல் வேண்டும்.

2. இது சம்மந்தமாக 31.07.2009 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/200(x), 31.05.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம1/2002(xi), 28.07.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம 1/2002(xii),15.07.2011 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம 1/2002(xiii) மற்றும் 29.12.2010 ஆம் திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2010 இன் பொது நிதி கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பாக 1.1.2010 இல் அமுலுக்கு வரும் வகையில் பிண்ணிணைப்பு அட்டவனை 1 வருமான வகைப்படுத்தல்கள் என்பவற்றின் மீது தங்கள் தாழ்மையான கவனம் ஈர்க்கப்படுகின்றது.இதனடிப்படையில் தங்கள் நிறுவனத்திற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள வருமான இலக்கங்கள், கணக்கு கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டுக்கான வருமானக்கணக்கினை டிஜிஎஸ்ஏ 1 வருமானம் மற்றும் டிஜிஎஸ்ஏ 2 வருமானம் படிவங்களின அடிப்படையில் ஒவ்வொரு வருமானக் குறியீட்டுக்கும் தனித்தனியாக தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

3. டிஜிஎஸ்ஏ 2 வருமானம் படிவத்தின்படி கடந்த 3 ஆண்டுகளுக்கான தொகையை தாங்கள் குற்த்துக்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். ஆகவே தாங்கள் சரியான வருமான தொகைகளை குறித்த ஆண்டிற்காக சமர்பிக்கப்படுவதையும் 2012 ஆண்டுக்கான வருமான கணக்கு தொகைகள் திறைசேரியின் 2012 ஆம் ஆண்டுக்கான இறுதிக்கணக்கு கூற்றுடன் இணக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக சரியான ஒத்த வருமானக் குறியீடுகளை தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவதுடன் இது தொடர்பாக அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வினியோகிக்கப்பட்ட 27.09.2006 ஆம் திகதிய 187/2006 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்று நிருபத்தை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.



මහ භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka. General - Tel.: +94 112 484600 Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 112 484728 Fax: +94 112 473856 e-mail: dgsa@sad.treasury.gov.lk Additional Director General - Tel.: +94 112 484898
Director (Accounting & Reporting): +94 112 484747 Director (Accounting Services): +94 112 484753 Director (Systems & Training): +94 112 484733

4. கடந்த சில வருடங்களில் சமர்பிக்கப்பட்ட வருமானக்கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்பிக்கப்பட்டுள்ள பிரதான 5 கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

4.1 வருமான மதிப்பீடுகளை முன்மதிப்பிடும் போது உண்மை பெறுமதிகள் பாவிக்கப்படாது இருப்பதுடன் தேவைப்படும் போது நிதி கொள்கை திணைக்களத்திற்கு அறிவித்து மதிப்பீடுகளை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.

4.2 அறவிட வேண்டிய தொகைகளின் கூற்று ஒவ்வொரு அரையாண்டிற்கு ஒருமுறை பணப்பாளர் நாயகம், நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு அனுப்பப்படாமை.அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிடப்பட வேண்டிய வருமானங்களை அறவிட்டுக்கொளவதற்கான போதிய சன்றுகளை திரட்டாமை.சரியான தொகையை தீர்மானிப்பதற்கு இயலாமையும் வசூலிக்கப்பட்ட கனிசமான பகுதிகளை இணக்கப்படுத்தாமையும்.( அறவிடப்பட வேண்டிய வருமான அறிக்கைகளை இன்னும் கணக்காய்வு சமர்பிக்கப்படாமை) அறவிடப்படாத வருமானங்களை அறவிடப்படுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை. ஏன்பவற்றுடன் அறவிடப்படாத வருமானங்கள் குறித்தகாலப்பகுதியில் அறவிட்ட தொகைகள் வேறாக அறிக்கைபண்ணுவதில் தவறியமை.

4.3 ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களில் மாதாந்த கணக்கு கூற்றுக்களினுடாக வருமான கணக்கிற்க்கு வரவு செலவு வைக்கப்பட்டவை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வரவு செலவு தாள்கள் இணக்கம் காணப்படாமை.

4.4 திணைக்கள கணக்குகள் திறைசேரி print out உடன் இணக்கம் காணப்படாமை.

5. வருமானகணக்கு மூண்று மொழிகளில் ஒரு தனி ஆவணமாக டிஜிஎஸ்ஏ வருமான மாதிரி படிவம் 1 மற்றும் டிஜிஎஸ்ஏ வருமானம் மாதிரி படிவம் 2 ற்கு ஏற்ப A4 அளவு கடதாசியில் தயாரிக்கப்பட்டு கணக்கு கிளைத்தலைவர் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்தி அதன் சரியான தன்மையை சோதிப்பதோடு கணக்கீட்டு உத்தியோகத்தர் அவ் ஆவணத்தில் கையொப்பம் இட வேண்டும். பின்னர் அவற்றில் 3 பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு 31.03.2013 ற்கு முன்னர் அனுபப்பட வேண்டும்.மேலும் கைஒப்பமிடும் போது கேட்க்கப்பட்ட எல்லா தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. டிஜிஎஸ்ஏ வருமான மாதிரி படிவம் 1 மற்றும் டிஜிஎஸ்ஏ வருமானம் மாதிரி படிவம் 2 என்பவை அரச கணக்குககள் திணைக்களத்தின் இணையத்தளம் www.treasury.gov.lk இல் இருந்து படிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்பதுடன் மேலதிகமாக தேவைப்படும் போது பிரதிப்பணிப்பாளா, கணக்குகள் சேவை அவர்களிடமிருந்து pen drive இல் பிரதி செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு பணப்பாளர்இ கணக்குகள் சேவை தொலை பேசி இலக்கம் 011-22484753 மேலும் பிரதிப்பணிப்பாளர் கணக்குகள் சேவை தொலை பேசி இலக்கம் 011-2484731 என்பவறறினஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

7. கணக்காய்வு செய்யப்பட்ட வருமானக்கணக்கு பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் பின் வருமாறு அனுப்ப படும்.

| | | |
|---|---|---|
| 1. மூலப் பிரதி | - | அரச கணக்குகள் திணைக்களம் |
| 2. இரண்டாவது பிரதி | - | உரிய அமைச்சு / திணைக்களம் |
| 3. மூண்றாவது பிரதி | - | கணக்காய் வாளர் நாயகத்தினால் வைத்துக்கொள்ளப்படும் |

ஒப்பம்: என்.ஜீ. தயாரத்ன

அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம்

திறைசேரி பிரதிச் செயலாளருக்காக

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்
2. பணிப்பாளர் நாயகம், நிதி கொள்கைகள் திணைக்களம்